பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ தோற்றம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: ஐப்பசி 17 (3—11—71) புதன் வெளியூர்: ஐப்பசி 18 (4—11—71) வியாழன் [இதழ்: 117

நிலமில்லா ஏழைகட்கு வீட்டு மனை — மத்திய அரசு திட்டம்

★

புதுடில்லி, நவ. 3—
கிராமப்புறங்களில் நிலமில்லா ஏழைகளுக்கு வீட்டு மனை ஒதுக்கித் தருவதற்கு, மாநில அரசுகளுக்கு உதவி செய்யும் வகையில் மத்திய அரசு திட்டம் ஒன்றை வகுத்திருக்கிறது.

'நன்னம்பிக்கையோடு செல்கிறேன்'

'வெற்றிச் செய்தி அமெரிக்காவை எட்டச்செய்வீர்'

கழக—தோழமைக் கட்சித் தோழர்களுக்குக் கலைஞர் வேண்டுகோள்

பொள்ளாச்சி, நவ. 3—

"பொள்ளாச்சித் தொகுதி இடைத் தேர்தலில், கழக வேட்பாளர் மோகன்ராஜ் வெற்றி பெறுவார் என்பதில் எனக்கு நிறைந்த நம்பிக்கையிருக்கிறது; அதனுல்தான், எந்தத் தேர்தலானுலும் இறுதிவரையில் இதில் கவனம் செலுத்தும் நான் — இந்தத் தேர்தலைப் பொறுத்தவரையில் — கோவை மாவட்டத் தோழர்களிடத்தில் மிகுந்த நம்பிக்கையோடு பொறுப்பை ஒப்படைத்துவிட்டு அமெரிக்கா செல்லவிருக்கிறேன்; நீங்கள் இந்த வெற்றிச் செய்தியை அமெரிக்காவிற்கு அனுப்பி வைப்பீர்கள் என்ற நம்பிக்கையோடுதான செல்லவிருக்கிறேன்.

"கழகத் தோழர்களும் — தோழமைக் கட்சியினரும் இதில் கண்ணுங்கருத்துமாக இருந்து வெற்றிச் செய்தியை அனுப்பிவைக்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

"'நாம்தான் வெற்றி பெறப் போகிறோம்' என்று மதமதப்பாக இருந்துவிடாமல், தேர்தல் வாக்குப் பதிவு நாளான 13-ம் நாளன்று வாக்காளர்களை வாக்குச் சாவடிக்கு அழைத்துச் சென்று வாக்களிக்கச் செய்யுங்கள்.

"கழகத் தோழர்கள் கடமையாற்றும் வேகத்தில் முயலைப் போன்றவர்கள் என்றாலும், முயலும் — ஆமையும் கதையை அறிந்திருப்பீர்கள்; நீங்கள் முயலாக இருந்தாலும், எதிர்த்து நிற்கும ஆமை, பொருமை — இயலாமை — அழுக்காறு — எனும் ஆமையாகும்; இந்த ஆமை முந்திவிடாமல் விழிப்பாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்!

"வேகத்தில் முயலாகவும் — வீரத்தில் சிங்கமாகவும், வேங்கையாகவும் இருக்கின்ற உங்களது திறமையில் மிகுந்த நம்பிக்கை இருக்கிறது.

"இன்றுமுதல் பட்டிதொட்டிதோறும் உங்கள் பணி ஆரம்பமாகட்டும்; வீட்டுக்கு வீடு செல்லுங்கள் — வாக்காளர் ஒவ்வொருவரையும் சந்திதது ஆதரவு திரட்டுங்கள்; எனக்கிருக்கின்ற பயமெல்லாம், 'வெற்றி பெறப் போவது உறுதி என்ற நம்பிக்கையில் மெத்தனமாக இருந்துவிடக் கூடாதே' என்பதுதான்!

"ஆகவே கழகக் கண்மணிகளே — தோழமைக் கட்சித் தோழர்களே — இன்றிலிருந்து ஓய்வு உறககமின்றி — அயர்வின்றி — சோர்வின்றிப் பணியாற்றுங்கள் — வெற்றி உறுதியாகும்"

— என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், அவல்பூந்துறையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் வேண்டுகோள் விடுத்தார்; அவர் மேலும் பேசியதாவது:—

"1967-ல் அறிஞர் அண்ணாவின் தலைமையில் கழக ஆட்சி ஏற்பட்டபோது, 'ஏழை எளிய தொழிலாளி — பாட்டாளி — நடுத்தரக் கிராம விவசாய பெருங்குடி மக்களுக்கான திட்டங்கள் தீட்டப்பட வேண்டும்' என்று அண்ணா அவர்கள் கூறினர்.

பின் அவரது சொல்லுக்கு ஏற்ப — அதுவெறும் சொல்லாக இல்லாமல் — செயல் வடிவம் பெற்று நிறைவேற்றப்பட்டு வருகிறது. அவரது வழியில் அவரது தம்பிமார்களாகிய நாங்கள் நாட்டில் அமைதி பொங்க ஆட்சி நடத்தி வருகிறோம்.

இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்குத் தமிழகத்தில் மக்கள் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள்; இங்கு, சட்டம் — ஒழுங்கு பாதுகாக்கப்படுகிறது; மக்களிடையே நிம்மதி நிலவுகிறது.

இதனை வேறெந்த மாநிலத்திலும் காண இயலாது என்று பலரும் பாராட்டுகிறார்கள்.

அப்படிப்பட்ட அமைதியான முறையில் நாங்கள் ஆட்சி நடத்தி வருகிறோம் என்றால், அதற்குக் காரணம் நீங்கள் தான்!

விவசாயிகள் பெருமிதம்

தி. மு. கழகத்தின் சாதனை கண்டு விவசாயிகள் பெருமை கொள்கின்றனர்; அவர்களில் பலரும் உண்மை உணர்ந்திருக்கிறார்கள்; இதனுல் பலரும் தி. மு. கழகத்தில் வந்து சேருகிறார்கள்.

இப்பகுதியில் 25-பேர் வந்து கழகத்தில் சேர்ந்திருப்பதாக மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

இந்த நேரத்தில், இன்னொரு மகிழ்ச்சிகரமான செய்தியையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்; நான் கோவை விமான நிலையத்தில் இறங்கும்போது அவினாசித் தொகுதி விவசாயச் சங்கத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் — இன்னொருவருடன் வந்து — என்னைச் சந்தித்தார்; அப்படிச் சந்தித்த அவர், 'இனிமேல் விவசாயிகளுக்காகத் தனிச் சங்கம் என்று ஒன்று தேவையில்லை என்ற காரணத்தால், தி. மு. கழகமே தொழிலாளிகள் சங்கமாக — பாட்டாளிகள் சங்கமாக — ஏழை எளியவர்கள் சங்கமாக — விவசாயிகள் சங்கமாக இருக்கின்ற காரணத்தால், அந்தத் தனிப்பட்ட சங்கத்திலிருந்து விலகுகிறேன்' என்று தெரிவித்து தி. மு. கழகத்தில் சேர்ந்துவிட்டார்.

இது எதைக் காட்டுகிறது? — 'தி. மு. கழகத்தின்பால் இதுவரை சந்தேகத்தோடு பார்த்து வந்தவர்கள் கழக அரசு செய்து வரும சாதனைகளை அறிந்து — வாழ்வில் அடங்கிக் கிடக்கின்ற ஏழை எளிய மக்களுக்காகத் தி. மு. கழக அரசு பாடுபடுகிறது என்பதை அறிந்து கழகத்தின் பக்கம் சேருகிறார்கள்' என்பதைத்தான்!

கழக வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கும் மோகனராஜ் குடும்பத்தார் எப்போதோ ஜமீன்தாரர்களாக இருந்ததைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள்; இன்றைக்கு எங்கே அவர்கள் ஜமீன்தார்களாக இருக்கிறார்கள்?

கழக வேட்பாளர் மோகன்ராஜ் அவர்கள் தந்தையார் நீதிக கட்சியைச் சேர்ந்தவர்; கோவையில் அமைக்கப்பட்ட அறிஞர் அண்ணா அவர்களின் சிலை அமைப்புக் குழுவிற்கு அவர் தலைவராக இருந்தார்; கோவையில் அண்ணா அவர்களின் சிலை திறப்பதற்காக அரும் பணியாற்றியிருக்கிறார்; அண்ணா அவர்களின் சிலை திறப்பு விழாவிற்கு என்னை அவர் அழைத்ததை என்னுல் மறக்கமுடியாது.

அப்படிப்பட்ட ஒருவரின் மகனைத்தான் கழகத்தின் சார்பில் நிறுத்தியிருக்கிறோம்; அவரும் கழகத்தில் தீவிர ஈடுபாடு கொண்டவர்; அவரை நீங்கள் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுத்து அனுப்பினுல் கழகத்தின் கருத்துக்களை எதிரொலிப்பார். ஆகவே அவரை வெற்றி பெறச் செய்யவேண்டியது உங்களது கடமையாகும்."

பதவியிலிருந்து வெளியேறுகிறார்

பெர்னே, நவ. 3—
சுவிட்சர்லாந்திலுள்ள பாகிஸ்தான் தூதுவரகத்தில் இரண்டாவது செயலாளராக இருந்து வரும் வாலியூர் ரகிமான் என்பவர், தமது பதவியை இராஜிநாமா செய்து, இனிமேல் வங்க தேசத்துக்கு ஆதரவாகத்தாம் செயல்படப்போவதாக அறிவித்தார்.

கழகக் கண்மணிகளே — கவனத்தில் கொள்க!

அரசலூர், நவ. 3—
"வீட்டில் அரிசி இருக்கிறது — விறகு இருக்கிறது — அடுப்பு இருக்கிறது; இவையெல்லாம் இருந்துவிட்டால் மட்டும் அரிசி சாதமாகிவிடாது — என்பது, தாய்மார்களுக்குத் தெரியும்.

"பானையில் தண்ணீரை எடுத்து அடுப்பில் வைத்து எரியவிட்டால்தான் சமையல் ஆகும்; தானே ஆகும் என்றால் மட்டினியாகத்தான் இருகக நேரிடும்; ஆகவே, எல்லா ஆதரவும் நமக்குத்தான் என்றாலும், வெற்றிக் கனி தானுகக் கிடைத்துவிடாது!

"ஆகவே தேர்தல் நாளான நவம்பர் 13-ம் நாளன்று வீட்டுக்கு வீடு சென்று — வாக்காளர்களை வாக்குச் சாவடிக்கு அனுப்பிவைத்து வாக்களிக்கச்செய்வதில்தான் வெற்றி கிடைக்கும்! அதில் கழகக் கண்மணிகளாகிய நீங்கள் தீவிரம் காட்ட வேண்டும்!"

— கழகத் தலைவர் கலைஞர்
(தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில்)

ஐ. நா.-வின் சீனத் தூதுக் குழு பெயர் அறிவிப்பு

ஐ. நா. அவையில் உறுப்பினராகி இருக்கும் சீனா ஐ. நா.-வுக்கு அனுப்பவிருக்கும் தமது தூதுக் குழுவினரின் பெயரை அறிவித்துவிட்டது.

தூதுக் குழு எப்போது ஐ. நா. புறப்படும் என்பது இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

பாசிச உணர்வை முறியடிக்க 'உதயசூரியனி'ல் முத்திரையிடுவீர்!

காங்கயம், நவ. 3—
"கோவை மாவட்டத்தில் 1957-ஆம் ஆண்டுத் தேர்தலில் நமக்கு ஒரு இடம்கூடக் கிடைக்கவில்லை; ஆயினும் நாம், 'சனநாயகக் கடமையை நிறைவேற்றவேண்டும்' என்று நினைத்தோம்.

"வெற்றிபெறுகிறோமோ இல்லையோ — சனநாயகத்திற்கு நாம் ஆற்றவேண்டிய கடமைக்காக இளம் தோழர்களை இங்கே நிறுத்தினேம்.

"அன்றைய வலிமை பொருந்திய காங்கிரசை எதிர்த்தோம்; 'தேர்தலில் நிற்பதன்மூலம் நமது எதிர்ப்பைக் காங்கிரசு புரிந்துகொள்ளட்டும் — நமது கருத்தை மக்கள் தெரிந்துகொள்ளட்டும் — இன்று இல்லாவிடினும் நாளை — நாளை இல்லாவிடினும் நாளை மறுநாள் நமது கருத்து வெல்லட்டும்' என்று நினைத்தோம்! சனநாயகக் கடமையைச் செய்தோம்!

"ஆனல் சிண்டிகேட் காங்கிரசுக் கட்சி, அண்மைக் காலமாக என்ன செய்து வருகிறது? — 'தேர்தலில் வெற்றிபெற வேண்டும் — அப்போதுதான் நிற்கவேண்டும்' என்று மட்டுமே செயல்படுகிறது; வெற்றியைத் தவிர வேறு எதையும் விரும்பாமல் — சனநாயகக் கடமையைச் செய்யாமல், 'வெற்றி — வெற்றி' என்று அலைவதோடு, 'நிற்க வேண்டும் — ஜெயிக்க வேண்டும்' என்று செயல்படுகிறது.

"'வெற்றி பெறுவதற்காகத்தான் நிற்க வேண்டும்' என்று நினைப்பதும், சனநாயகக் கடமையை மறுப்பதும் பாசிச உணர்வு ஆகும்!

"ஆனல் தி. மு. கழகமோ, அன்றும் சரி — இன்றும் சரி — தனது சனநாயகக் கடமையை ஆற்றிவருகிறது; 'வருகிற வாக்கு வரட்டும் — நாம் சொல்கிற கொள்கையைச் சொல்லுவோம் — எதிர்க்க வேண்டியவர்களை எதிர்ப்போம்' எனச் செயல்பட்டு வருகிறது!

"அத்தகைய கழகத்தின் சின்னம் — உதயசூரியன்! அண்ணா வழங்கிய சின்னம் — ஒளி உமிழ் சின்னம் — உத்தமக் கொள்கையின் சின்னம் — உயிரினும் இனிய சின்னம் — நம்மை வழிநடத்தும் சின்னம்; அத்தகைய சின்னத்தில் முத்திரையிட்டு பெருவாரியாக ஆதரிக்க வேண்டுகிறேன்."

— கழகத் தலைவர் கலைஞர்
(காங்கயம் தேர்தல் பிரச்சார கூட்டத்தில்)

வங்க அகதிகளின் துயரம்-- உள்ளத்தை உருக்கிவிடும்

திரும்பிச் செல்லுமாறு அவர்களிடம் கூறுவதற்கு எவருக்குத்தான் துணிவு ஏற்படும்?

உலகப் போரின்போது பிரிட்டனுக்கு ஏற்பட்ட அனுபவம்தான் இன்றைக்கு இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கிறது

யாகியா கான் அறிக்கைகள் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சூழ்நிலையைத் தோற்றுவிக்கவில்லை --- தலைமையமைச்சர் இந்திரா காந்தி தெளிவுரை

இலண்டன், நவ. 2—

"உலகப் போரின்போது, இட்லருடன் பிரிட்டன் பேசியிருக்க முடியும்; 'யூதர்கள் கொலை செய்யப்படுவதால் பாதகமில்லை' என்று பிரிட்டன் கூறியிருக்க முடியும்; ஆனால், பிரிட்டன் அவ்வாறு கூறவில்லை; அதற்குப் பதிலாக, நான்கு ஆண்டுகள் கடுமையாகப் பிரிட்டன் போரிட்டது!

"அதே நிலையைத்தான் இந்தியாவும் இன்று எதிர்நோக்கியுள்ளது; கிழக்கு வங்கத்திலிருந்து 90 இலட்சம் அகதிகள் ஏற்கனவே இந்தியா வந்துள்ளனர்; மேற்கொண்டு நாள் ஒன்றுக்கு 40,000 அகதிகள் வந்தவண்ணமாக இருக்கின்றனர்; ஒவ்வோர் அகதிக் குடும்பமும் கூறும் கற்பழிப்பு -- கொலை பற்றிய சோகக் கதைகள், உள்ளத்தை உருக்கக்கூடியவையாகும்; மேற்குப் பாகிஸ்தான் நடவடிக்கைகளே இதற்குக் காரணமாகும்; எனவே, அகதிகள் பாதுகாப்புடன் திரும்புவதற்கான நிலவரங்களைத் தோற்றுவிப்பது பாகிஸ்தானின் பொறுப்பாகும்.

"வங்க தேசப் பிரச்சினை சம்பந்தமாக, இந்தியாவுக்கும் – பாகிஸ்தானுக்குமிடையே சமரசம் செய்துவைக்கும் ஐ. நா. பொதுச்செயலாளர் யோசனை ஏற்கக்கூடிய ஒன்றல்ல; இந்தியாவுக்கு வந்துள்ள 90 இலட்சம் அகதிகளிடம் சென்று, உயிரை இழப்பதற்காகக் கிழக்கு வங்கத்துக்குத் திரும்பிச் செல்லுமாறு கூற ஊ-தாண்டுக்கோ அன்றி வேறு யாருக்கோ துணிச்சல் உண்டா?"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, உணர்ச்சிவயத்துடன் வினவினர்; இலண்டனில், வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் சங்கத்தின் விருந்துக் கூட்டத்தில் பேசுகையில் மேலும் அவர் கூறியதாவது :—

"பாகிஸ்தானுடன் போரைத் துவக்கும் எண்ணம் எதுவும் இந்தியாவுக்குக் கிடையாது; ஆனால், எங்கள் மீது போர் திணிக்கப்படுமானால் -- எங்களை தற்காத்துக் கொள்ள நாங்கள் நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் -- மக்கள் மன்னிக்கமாட்டார்கள்.

இந்தியா -- பாகிஸ்தான் எல்லையில் தற்போதைய பதட்ட நிலையைப் பாகிஸ்தான் தோற்றுவித்திருக்கிறது; பெரும் எண்ணிக்கையில் படைகளைப் பாகிஸ்தான் கிழக்கு வங்கத்துக்கு அனுப்பி -- இந்தியாவின் பாதுகாப்புக்கு அபாயத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

படைகளைத் திரும்பப் பெறுமாறு எங்களைக் கோருகின்றனர்; ஆனால், 'எல்லையிலிருக்கும் பாகிஸ்தான் படைகள் திரும்பிவிட வேண்டும்' என்று யாரும் கூறக் காணோம்.

பாகிஸ்தானைத் தாக்க நாங்கள் விரும்பவில்லை; போரையும் நாங்கள் விரும்பவில்லை.

கடந்த காலத்தில் இந்தியாதான் மூன்று தட்வை தாக்கப்பட்டிருக்கிறது; பாகிஸ்தான் இரு தடவை தாக்கியுள்ளது; அப்படியிருந்தும், அந்நாட்டுடன் போரைத் துவக்க நாங்கள் விரும்பவில்லை.

பாகிஸ்தான் அதிபர் யாகியா கானுடன் பேச்சு நடத்துவதை நான் எதிர்ப்பதாகக் கூறுவது உண்மையல்ல; இரு நாடுகளுக்கும் தொடர்பான பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்கும் பொருட்டு யாகியா கானை சந்திக்க நான் எப்போதும் தயார்; ஆனால், வங்க தேசப் பிரச்சினை இந்தியா -- பாகிஸ்தான் பிரச்சினையல்ல!

அண்மையில் யாகியா கான் விடுத்துள்ள அறிக்கைகள், பேச்சு வார்த்தை நடத்துவதற்கான சூழ்நிலையைத் தோற்றுவிக்க உதவவில்லை."

பொறுமையின் எல்லையைக் கடந்துவிட்டோம்

உலக நாடுகளின் கடமையை உணர்த்துகிறர் தலைமையமைச்சர் இந்திரா காந்தி

இலண்டன், நவ. 2—

"இன்றுள்ள நிலைமை இந்தியாவுக்கு மட்டுமன்றி உலகத்துக்கே ஆபத்தானதாகும்.

"என்ன நடக்கும் -- அதை நாங்கள் எப்படிச் சமாளிப்போம் என்பது எனக்குத் தெரியாது; நிலைமை மோசமாகிக்கொண்டு வருகிறது -- நெருக்கடி வலுத்துக்கொண்டு வருகிறது' என்று மட்டும்தான் நான் சொல்லமுடியும்.

"இந்தியா எப்போதும் போரை எதிர்த்து வந்திருக்கிறது; தகராறுகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே இந்தியாவின் நிலையாகும்; ஆனால், 'நாட்டின் பாதுகாப்பு' என்று வரும்போது விட்டுக்கொடுக்க முடியாது.

"இந்தியாவின் சுதந்திரத்திற்கு ஆபத்தை விளைவிக்கும் அல்லது தனது தேசிய நலன்களுக்கு ஏற்றமுடிவுகளை இந்தியா எடுத்துக் கொள்வதைப் பாதிக்கும் எந்த உதவியையும், யாரிடமிருந்தும் இந்தியா ஏற்றுக்கொள்ளாது; எங்களுக்கு உதவி வேண்டியதுதான்; ஆனால், யாருடைய உதவியையும் நாங்கள் நம்பியிருக்கவில்லை; எந்த நாட்டின் நிர்ப்பந்தத்திற்கும் நாங்கள் பணியமாட்டோம்.

"நான் ஒரு எரிமலையின்மீது உட்கார்ந்துகொண்டிருக்கிறேன்; உண்மையாகச் சொல்லுகிறேன் -- அது எப்போது வெடிக்கும் என்று எனக்குத் தெரியாது"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, திட்டவட்டமாகத் தெரிவித்தார்; இந்தியா லீக் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் அவர், வங்க தேசப் பிரச்சினை -- அகதிகள் நிலை -- எல்லைப்புறங்களில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை ஆகியவைகளை விரிவாக விளக்கிப் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது :—

"நாட்டின் பாதுகாப்புக்கு ஒரு பெரிய அபாயம் தோன்றியுள்ள இந்த நேரத்தில், இந்தியா காட்டிய அடக்கத்தைப்போல் வேறு எந்த நாடும் காட்டியிருக்க முடியாது.

ஆனால், எவ்வளவுதான் அடக்கம் காட்டினாலும், இப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுவதாகத் தெரியவில்லை; அதற்கு மாறாக, இராணுவப் படைக் குவிப்புகள் – பொருளாதார சுமைகளும்தான் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன.

இந்தியா எவ்வளவு காலத்துக்கு இதைத் தாக்குப்பிடிக்க முடியும் என்று பலர் [illegible] கேட்கிறார்கள்; உ[illegible] [illegible]மயில் அந்தக் காலம் கடந்[illegible]ட்டது!

இதற்கு ஒரு தீ[illegible] கண்டுபிடிக்க வேண்டியது உலக நாடுகளின் கடமையாகும்; அரசியல் தீர்வு ஒன்றுதான் நியாயமானது; தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கதேசப் பிரதிநிதிகளுடன்தான் இந்த உடன்பாட்டைச் செய்துகொள்ள முடியும்.

பாகிஸ்தானோ -- அங்குள்ள மக்களோ எங்களுக்கு விரோதிகள் அல்லர்; அவர்கள் நன்றாக இருக்கவேண்டும் என்றுதான் நாங்கள் எப்போதும் விரும்பி வந்திருக்கிறோம். தேர்தலில் முஜிபுர் ரகிமானின் அவாமி லீக் இவ்வளவு பெரும் வெற்றி பெறும் என்பது எங்களுக்குத் தெரியாது; பாகிஸ்தானின் எந்த அரசியல் கட்சியுடனும் எங்களுக்குத் தொடர்பு கிடையாது.

பாகிஸ்தானின் மிருக வெறியைக் கண்டிக்க யாரும் முன்வரவில்லை

நிலைமை மோசமான பிறகு ஐ. நா. பார்வையாளர்களை அனுப்புவதா?

'எங்களுடைய நலன்களைப் பாதுகாத்துக்கொள்ளும் உரிமை உண்டு' -- இந்திரா காந்தி திட்டவட்டமான அறிவிப்பு

இந்தியாவுக்கும் கிழக்கு வங்காளத்துக்குமிடையே உள்ள எல்லையில் இருபக்கங்களிலும் ஐ. நா. பார்வையாளர்களை நிறுத்தவேண்டும் என்ற யோசனையை இந்தியா அடியோடு எதிர்ப்பதாகக் குறிப்பிட்டு திருமதி இந்திரா காந்தி கூறியதாவது :—

"கிழக்கு வங்காளத்தில் பாகிஸ்தான் அரசு மிருகத்தனமான நடவடிக்கைகளைத் தொடங்கியது; அதன் விளைவாக அகதிகள் இந்தியாவுக்கு வரத் துவங்கியதிலிருந்து நிலைமையின் கடுமையை மற்ற நாடுகள் உணரும்படிச் செய்ய எங்களால் இயன்ற வரை முயன்றோம்; இருப்பினும், எந்த நாடும் எதுவும் செய்யவில்லை.

எங்களுடைய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு -- முன்னெச்சரிக்கையாக எங்களுடைய படைகளை அனுப்ப வேண்டி ஏற்பட்டபோது, திடீரென்று, 'எல்லையில் ஐ. நா. பார்வையாளர்களை நிறுத்த நாம் ஒப்புக்கொள்ள வேண்டும் -- அல்லது எல்லையிலிருந்து இருநாடுகளின் படைகளும் திரும்ப வேண்டும்' என்று யோசனை கூறப்படுகிறது.

இந்த நிலைமை பாகிஸ்தானால் தோற்றுவிக்கப்பட்டது; அதன் நடவடிக்கைகள் எங்களுடைய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கிறது என்ற போதிலும், இந்தியாவை பாகிஸ்தானுடன் சமமாக வைத்துப் பேசப்படுகிறது.

ஐ. நா. பார்வையாளர்களை நிறுத்தும் யோசனையை, அடிப்படையில் இந்தியா எதிர்க்கவில்லை; ஏற்கனவே அகதிகளுக்கான ஐ. நா. கமிஷனரின் 10 பார்வையாளர்கள் இந்தியாவில் உள்ளனர்; அவர்கள் இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் போகலாம்; அவர்கள் ஏற்கனவே அகதி முகாம்களுக்குச் சென்றுள்ளனர்; அந்நிய தூதரகத்தைச் சேர்ந்தவர்களும் --- அந்நியச் செய்தி நிருபர்களும் அகதி முகாம்களையும், எல்லையையும் பார்வையிட்டனர்.

நாங்கள் எதையும் மறைக்க விரும்பவில்லை; நாங்கள் என்ன செய்கிறோம் என்பதை யார் வேண்டுமானாலும் வந்து பார்க்கலாம்; ஆனால், எங்களுடைய நாட்டின் நலனுக்கும் -- பாதுகாப்புக்கும் அபாயம் ஏற்படுவதை அனுமதிக்க முடியாது; எங்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள உரிமை உண்டு."

அடிப்படை உண்மைகளை உணருவது அவசியம்

உலக நாடுகளுக்கு இந்திரா வலியுறுத்தல்

இலண்டன், நவ. 3—

'கிழக்கு வங்காளத்தில் 10 இலட்சம் மக்களைப் படுகொலை செய்துவிட்ட பாகிஸ்தான் இராணுவ ஆட்சிக்கு உதவுவதன் மூலம் உலக அரசுகள், பாகிஸ்தானின் மக்களுக்கு நன்மை செய்தவர்களாகமாட்டார்கள்.

"வங்காள தேசத்தில் சம்பந்தப்பட்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளை உலகம் தட்டிக் கழிக்க முடியாது"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, இரண்டு டெலிவிஷன் நிகழ்ச்சிகளின்போது குறிப்பிட்டுக் கூறினர்.

தங்களுக்கு முழு உரிமைகள் அளிக்கப்படுவதைத் தவிர வேறு எதற்கும் கிழக்கு வங்க மக்கள் ஒப்புக்கொள்வார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது" என்றும் அவர் சுட்டிக்காட்டினர்.

தாக்கினல் தவிடுபொடி -- எதிரியை எதிரியின் மண்ணிலே சந்திப்போம்

பாகிஸ்தானுக்கு ஜெகஜீவன்ராம் எச்சரிக்கை

நீமூச், (மத்தியப் பிரதேசம்) நவ. 3—

"பாகிஸ்தான் மறுபடியும் இந்தியாவைத் தாக்குமானால் தாக்குதலை முறியடிப்பதுடன், அவர்களை அவர்களுடைய பகுதிக்குள் விரட்டியடித்து எதிரியின் மண்ணிலேயே போரை நடத்தும்படி மேற்கு எல்லையில் நிறுத்தப்பட்டுள்ள நம்முடைய படைகளுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது"

என்று பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம் தெரிவித்தார்.

"இம்மாதிரி மறுபடியும் பாகிஸ்தான் ஏதாவது செய்தால பாகிஸ்தான் மண்ணில்தான் போர் நடக்கும் -- இந்திய மண்ணில் அல்ல"

என்று அவர், ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினர்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"அரசியல் ரீதியாகவும்—பொருளாதார ரீதியாகவும் இந்தியாவை சீர்குலைப்பதற்காக விஷமத்தனமாக இலட்சக்கணக்கான அகதிகளை விரட்டியடித்திருக்கும் பாகிஸ்தானின் தீயநோக்கங்களுக்குப் பதிலளிக்க வேறு வழி இல்லை.

"வங்காள தேசம் தன் கீழ் இராது என்பதைப் பாகிஸ்தான் உணர்ந்துவிட்டால், போருக்கு அவசியமிராது.

"நிலைமையை உணர்ந்து வங்காள தேசத்தை நட்பு முறையில் கைவிட்டு ஒப்புக்கொள்ள இன்னமும் காலந்தாழ்ந்து விடவில்லை."

2000 பர்மா தமிழர்கள் சென்னை வருகை

சென்னை, நவ. 3—

இரு பிரிவாக 2,000 பர்மா தமிழர்கள், நவ. 6, 16-ந் தேதிகளில் சென்னை வருகின்றனர்.

உடனடியாக அவர்கள் கும்மிடிப்பூண்டியிலுள்ள முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

அண்ணா சதுக்கத்தில் இளங்கோவடிகள் சிலை

கலைஞர் திறந்துவைக்கிறர்

சென்னை, நவ. 2—

7—11—71 மாலை 7-மணிக்கு சென்னைக் கடற்கரை அண்ணா சதுக்கத்தில் நிறுவப்பட்டுள்ள இளங்கோவடிகளின் உருவச் சிலையை, முதல்வர் டாக்டர் கலைஞர் திறந்துவைப்பார்.

கல்வியமைச்சர் நாவலர், இவ்விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் சிறப்புரை நிகழ்த்துவார்.

இந்தச் சிலையை முரசொலி மாறன் எம்.பி. அவர்கள் வழங்கியுள்ளார்.

மாணவர்களுக்கு உடல் நலக் கார்டுகள்

தமிழக அரசு திட்டம்

சென்னை, நவ. 3-

தமிழ்நாடு முழுவதிலும் மாணவர்களின் உடல்நலனைக் குறிக்கும் கார்டுகளை வைத்துக் கொள்ளும் திட்டம் ஒன்றை விரைவில் தொடங்க அரசு எண்ணியிருக்கிறது.

இத்திட்டத்தின்படி, ஒரு குழந்தை பள்ளிக்கூடத்தில் சேர்ந்தது முதல் பள்ளி அதிகாரிகள் அதன் உடல் நலன் பற்றிய விவரங்களை ஒரு கார்டில் பதிய வைத்துக் கொள்வார்கள்.

குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை அக்குழந்தைகளின் உடல் நலன் பரிசோதிக்கப்படும்.

மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை இந்த மருத்துவப் பரிசோதனை நடக்கக்கூடும்.

பரிசோதனை நடந்து -- குழந்தையின் உடல் நிலைமை பற்றிய தகவல்கள் அந்தக் கார்டில் பதிவு செய்யப்படும்.

அம்மாணவன் அப்பள்ளியில் படிப்பை முடித்த பின் கல்லூரி அதிகாரிகளுக்கும், வேறு பள்ளியில் போய்ச் சேர்ந்தால் அப்பள்ளி அதிகாரிகளுக்கும் இக்கார்டு அனுப்பப்படும்.

மாநகராட்சி சுகாதார அதிகாரி ஏ. இராமச்சந்திர ராவ் இத்தகவலைத் தெரிவித்தார்.

இத்திட்டத்தை நிறைவேற்ற ஒரு குழுவை, மாநில அரசு ஏற்கனவே நியமித்துள்ளது என்றும் இத்திட்டம் முன்பு மத்திய சுகாதாரத் துறையினல் விடுக்கப்பட்டதாகும் என்றும் அவர் சொன்னர்.

"மாநகராட்சிப் பள்ளிகள் சம்பந்தப்பட்டவரையில், மாணவர்களுக்கு அவ்வப்போது மாநகராட்சி சுகாதார அதிகாரிகளினல் மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட்டு வருகிறது" என்று அவர் சொன்னர்.

சென்னை மாநகராட்சிப் பள்ளிக்கூடங்களில் சுமார் இரண்டு இலட்சம் மாணவர்கள் படிக்கிறர்கள் என்றும், இவர்களைப் பரிசோதிக்க மாநகராட்சியில் உள்ள 6 டாக்டர்கள் போதாதென்றும், ஒரு டாக்டர் ஒரு நாளைக்கு அதிகபட்சம் 40 மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை நடத்தலாம் என்றும், ஓராண்டில் 240 நாட்களே வேலை நாட்கள் என்றும் அவர் கூறினர்.

திரைப்பட அரங்கு கட்டுவதற்கு உதவி

திரைப்பட அரங்குகள் கட்டுவதற்கு ஆயுள் இன்சூரன்சுக் கார்ப்பரேஷன் ஒரு புதிய கடனுதவி திட்டத்தைத் தயாரித்திருக்கிறது.

இந்தக் கடன்கள் 15 ஆண்டுகளுக்குள் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்; வட்டி 10 சதவிகிதம்.

தமிழ்நாட்டில் — கோயமுத்தூர், சென்னை, மதுரை, சேலம், திருச்சி ஆகிய இடங்களிலுள்ள சொத்துக்களின் பேரில் இந்தக் கடன் கொடுக்கப்படும்.

சொத்தின் மதிப்பில் சரி-பாதிக்கு மேற்படாமலும் ரூ. 5-இலட்சத்திற்கு அதிகமில்லாமலும் கடன்கள் கொடுக்கப்படும்.

அரசு மருத்துவமனையில் உண்டியல்

மருத்துவச் செலவுப் பற்றுக்குறையைச் சமாளிப்பதற்கு வழி

அமைச்சர் க. அன்பழகன் யோசனை --- திருச்சியில் முதன்முதலாகச் செயல்படுத்தப்படும்

திருச்சி, நவ. 3—

"மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகள் அவற்றின் வளர்ச்சிக்குத் தங்களால் இயன்ற உதவியை அளிப்பதற்காக மருத்துவமனைகளில் பெரிய உண்டிகளை வைக்கும்படி தமிழ்நாட்டில் உள்ள பெரிய அரசினர் மருத்துவமனைகளுக்குக் கூறப்பட்டிருக்கிறது"

என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் க. அன்பழகன் அவர்கள் கூறினர்.

முதலாவது உண்டியல் திருச்சியில் உள்ள மருத்துவமனையில் வைக்கப்படும்; இந்த உண்டியலை வேளாண்மை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் நன்கொடையாகத் தருவார்.

திருச்சி அரசினர் மருத்துவமனையில் ஹிந்த் குட்ட நிவாரண சங்கத்தால் ரூ 6,500 செலவில் கட்டப்பட்டுள்ள புதிய தொழு நோய் வார்டு துவக்க விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் பேராசிரியர் அன்பழகன் இதைத் தெரிவித்தார்.

இந்த நிதியாண்டில் மக்கள் நல்வாழ்வுத் துறை -- மருத்துவ நலத் திட்டங்களுக்காகத் தமிழ்நாடு அரசாங்கம் ரூ. 33 50 கோடி ஒதுக்கியிருப்பதாகக் கூறினர்.

இத்திட்டங்களுக்கு அரசாங்கம் ஒதுக்கியுள்ள தொகை போதுமானதல்ல என்றும் அதனால்தான் மருத்துவ நிலையக் கட்டடங்களில் உண்டியல்களை வைக்கும்படி அரசினர் மருத்துவமனைகளைக் கேட்டிருப்பதாகவும் சொன்னர்.

இந்த விழாவில் கலந்துகொண்டு பேசிய மின்சாரத் துறை அமைச்சர் ஓ. பி. இராமன், இதுவரை மாநிலத்தில் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்குக் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் வசூலாகியிருப்பதாகத் தெரிவித்தார்.

மாநிலத்தில் ஏழைக் குடும்பங்களில் ஒன்றரை வயதுமுதல் 5 வயதுக்குட்பட்ட எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசமாகச் சத்துணவு அளிப்பதற்கான ஒரு புதிய திட்டம் பற்றி மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் பரிசீலித்துக்கொண்டிருப்பதாக வேளாண்மை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் கூறினர்.

நெய்வேலி இளநிலைப் பொறியாளர் பிரச்சினை

முதல்வர் கலைஞர் முன்னிலையில் ஏற்பட்ட ஒப்பந்தம்

சென்னை, நவ. 3—

தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் முன்னிலையிலும் -- தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் முன்னிலையிலும், அக். 30-ம் நாளன்று நெய்வேலி நிலக்கரிச் சுரங்க நிர்வாகத் தலைவர் திரு. கோபால் குமாரமங்கலம் அவர்களும்—தொழிற் சங்கத் தலைவர் எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி. அவர்களும் பேச்சு வார்த்தை நடத்தியதன் பயனாக 220 இளநிலைப் பொறியாளர்கள் துணைப் பொறியாளர்களாகவும், 110 பொறியியல் மேலாளர்கள் இளநிலைப் பொறியாளர்களாகவும் உயர்வு பெறவும், அவர்கள் முன்பு பார்த்துவந்த வேலைகளையே பதவி உயர்வு பெற்ற பின்னரும் பார்த்து வருவது என்றும் ஒப்பந்தம் ஏற்பட்டது.

ரூ. 245 ஊதியம் வாங்கிவந்த பொறியியல் மேலாளர்கள் நவ. 1 முதல் இளநிலைப் பொறியாளர் ஊதியத்தின் முதல்நிலைப் பயனை அடைவர்.

இளநிலைப் பொறியாளர்களின் சம்பளம் -- சீனியாரிட்டி ஆகியவற்றில் இருந்துவரும் சில பொருத்தமின்மைகளை அகற்றுவதற்கும், நாள் ஊதிய அடிப்படையில் வேலை பார்க்கும் 'டிப்ளமோ' தகுதியுள்ளவர்களையும் பொறியியல் மேலாளர் வேலைக்கு அமர்த்தவும், இளநிலைப் பொறியாளர்களுக்குச் சில நிபந்தனைகளுக்கு உட்பட்ட 'ஓவர் டைம்' ஊதியம் கொடுக்கவும், தனி உதவிப் பணம் வாங்கிக் கொண்டிருக்கும் இளநிலைப் பொறியாளர்கட்குச் 'சுரங்கப் படி' கொடுக்கவும், 'ஏ.எம்.ஐ.இ' பட்டம் உடையவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு அளிக்கவும் ஒப்பந்தம் ஏற்பட்டது.

தொழிலாளர் நல ஆணையர் திரு ஜி. சமரத்தினம் அவர்களும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டார்.

இலஞ்ச ஊழலில் ஈடுபட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரி

பதவியிலிருந்து விரட்டப்பட்டார்

அகமதாபாத், நவ. 2—

குசராத் அரசின் துணைச் செயலாளராகப் பதவி வகித்து வரும் எஸ் திரிபாதி என்னும் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காகப் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறர்.

பாகிஸ்தானின் அட்டூழியம்

வங்காளி ஊழியர்களைத் தாக்கிய கொடுமை

புதுடில்லி, நவ. 3—

புதுடில்லியில் உள்ள பாகிஸ்தான் ஹை கமிஷன் (தூதரகப்) அலுவலகத்துக்குள்ளே அந்தத் தூதரகத்தைச் சேர்ந்த 10 வங்காளி ஊழியர்களை, மேற்குப் பாகிஸ்தான் ஊழியர்கள் கடுமையாகத் தாக்கி -- அவர்களை மூட்டை முடிச்சுகளுடன் தூக்கியெறிந்தனர்.

இதைத் தொடர்ந்து, பெண்களும் -- குழந்தைகளும் உட்பட 43 வங்காளி ஊழியர்கள் வெளியேறித் தப்பினர்.

தங்களுக்கு மேற்குப் பாகிஸ்தானி ஆட்சியாளர் இழைத்த கொடுமைகளை அவர்கள் விவரித்தனர்.

தூதரகக் கட்டடத்தை, 'இந்தியாவில் யாகியா கானின் கசாப்புக் கடை' என்று வர்ணித்தனர்.

"மேற்குப் பாகிஸ்தானிகள், பெண்களையும் -- குழந்தைகளையும்கூட சும்மா விட்டுவைக்கவில்லை" என்றும் அவர்கள் கூறினர்.

உள்ளாட்சி மன்றங்களில் நிதி வருவாய்

பெருக்கும் வழிவகை குறித்து அரசு பரிசீலனை

இராணிப்பேட்டை, நவ. 3—

"ஊராட்சி மன்றங்களின் தேவைகளைச் சமாளிப்பதற்கான வருமான இனங்களை அதிகரிக்கும் வழிவகைகளை அரசு ஆராய்ந்து வருகிறது"

என்று உள்ளாட்சித் துறையமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கூறினர்.

ஆற்காடு ஊராட்சி ஒன்றிய வரவேற்புக்குப் பதிலளித்துப் பேசுகையில் அமைச்சர் இதைத் தெரிவித்தார்.

ஒன்றியத் தலைவர் ஏ. சி. இரங்கசாமி வரவேற்பிதழ் வாசித்தளித்தார்.

தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புக்குச் சாலைகள் போட நிலங்களைக் கையகப்படுத்துவதை எதிர்த்து நீதிமன்றங்களில் வழக்காடுவது குறித்து நாவலர் வருத்தம் தெரிவித்தார்.

இம்மாதிரி காரியங்களுக்காக நிலங்கள் கையகப்படுத்துவதை எதிர்த்துக் கோர்ட்டுக்குப் போவதைத் தடுக்க ஒரு சட்டம் இயற்றுவது குறித்தும் அரசு யோசித்து வருவதாகச் சொன்னர்.

தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் என். வீராசாமி பேசினர்.

நந்தியாலம் கிராமத்தில் ஆற்காடு ஊராட்சி ஒன்றியம் ரூ. 10,000 செலவில் கட்டியுள்ள புதிய பள்ளிக் கட்டடத்தை நாவலர் திறந்து வைத்தார்.

இந்திய எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் படைகள் குவிகின்றன

ஷில்லாங், நவ. 3—

கிழக்கு வங்காளத்தின் உட்புறப் பகுதியிலிருந்து வெளியேறி இந்திய எல்லைக்குப் பாகிஸ்தான் படைகள் வந்து குவிந்திருக்கின்றன.

டாக்கா, கோமில்லா, சில்ஹெட், போன்ற இடங்களில், விமான -- ஹெலிகாப்டர்கள் உள்ள கொட்டகைகளின் கூரைகளை மறைப்பதற்காக அவைகளின்மீது பாகிஸ்தான் விமானிகள் பச்சை வண்ணம் பூசுகின்றனர்; பெட்ரோல் விற்பனை நிலைமைகளைப் பனை ஓலைகளால் மூடி மறைக்கும்படி அந்நிலையங்களின் விற்பனையாளர்களுக்கு உத்தரவிட்டிருக்கின்றனர்.

கோவைக்கு வானொலி நிலையம்

இடம் கிடைக்கவில்லை

கோயமுத்தூர், நவ. 3—

கோயமுத்தூரில் அகில இந்திய வானொலி நிலையம் ஒன்றை நிறுவுவதற்காக, 'ரேஸ் கோர்ஸ்' பகுதியில் 2 ஏக்கர் இடம் ஒதுக்கும்படி அகில இந்திய வானொலி கேட்டிருந்தது; இந்த கோரிக்கையை மாநில அரசு நிராசரித்து விட்டது.

"அகில இந்திய வானொலி கேட்ட இடம், உள்ளூர் அரசினர் கலைக் கல்லூரிக்குத் தேவைப்படுவதால், அதைக் கொடுப்பதற்கில்லை," என்று மாவட்ட கலெக்டர் எச். பி. ஷெட்டி நிருபர்களிடம் கூறினர்.

இப்போது கோவையில் அகில இந்திய ரேடியோ அஞ்சல் நிலையம்தான் இருக்கிறது; இது திருச்சி வானொலி நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்கிறது.

இந்தியாவில் எழுத்தறிவற்றோர்

குடியரசுத் தலைவர் வி. வி. கிரி வெளியிடும் உண்மை

புதுடில்லி, நவ. 3—

"உலகம் முழுவதிலும் எழுத்தறிவு இல்லாதவர்கள் 80 கோடி பேர்; இவர்களில் 30 கோடி பேர் இந்தியாவில் இருக்கின்றனர்; அதாவது, உலகம் முழுவதிலுமுள்ள படிக்காதவர்களில் 40 சதவிகிதம் பேர் இந்தியாவில் உள்ளனர்"

என்று, குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள், விழா ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

"இந்தியாவில் படிக்காதவர்களில் பெரும் பகுதியினர் பெண்களாக இருப்பது வருந்தத்தக்கது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிறந்த தமிழ்த் திரைப் படங்கள்

நவ. 7 ல் பரிசளிப்பு விழா

சென்னை, நவ. 2—

1970-ஆம் ஆண்டின் சிறந்த தமிழ்த் திரைப் படங்கள் -- திரைப் படக் கலைஞர்களுக்குப் பரிசு வழங்கும் விழா, 7–11–71 மாலை 5-மணிக்கு சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறும்.

ஆளுநர் திரு. கே. கே. ஷா தலைமை வகிப்பார்.

முதல்வர் டாக்டர் கலைஞர் பரிசுகளை வழங்குவார்.

தாக்குதல் முறியடிப்பு

மேகாலயா -- கிழக்கு வங்க எல்லையில் உள்ள டாகி பகுதியில், இந்திய எல்லைக்காவல் சாவடியைப் பாகிஸ்தான் படைகள் தாக்கியது; இந்தத் தாக்குதலை, இந்தியப் பாதுகாப்புப் படைகள் முறியடித்தன.

30 பேர்கள் இருந்த இந்தியக் காவல் சாவடியை 300 பேர் கொண்ட பாகிஸ்தான படையினர் தாக்கினர்; உடனே இந்திய வீரர்கள் ஆயுதமேந்தி அந்தத் தாக்குதலை முறியடித்தனர்; தாக்கியவர்களுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டது.

மாண்டவர்களையும், காயமடைந்தவர்களையும் தூக்கிக்கொண்டு பாகிஸ்தான் படையினர் ஓட்டம் பிடித்தனர்.

முக்கிய இடங்களைக் கைப்பற்றும் முயற்சி

பூஞ்ச் பகுதியில் போர் நிறுத்த எல்லைக் கோட்டுக்கு அருகில் சில முக்கிய இடங்களைக் கைப்பற்ற பாகிஸ்தான் செய்த முயற்சிகள் தோல்வியுற்றன; பலத்த சேதம் அவர்களுக்கு ஏற்பட்டது.

அடிக்கடி இந்திய நிலையங்கள்மீது பாகிஸ்தான் படைகள் சுடுவதையடுத்து பூஞ்ச் -- ரசோரி பகுதியில் பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது.

மூடப்பட்ட ஆலைகளைத் திறக்கும் நடவடிக்கை

குடியரசுத் தலைவரின் அவசரச் சட்டம்

புதுடில்லி, நவ. 2—

பொதுவாக நாட்டிலும் -- முக்கியமாக மேற்கு வங்கத்திலும் மூடப்பட்ட தொழிற்சாலைகளை மீண்டும் இயங்கச் செய்யும் பொருட்டு தொழில் வளர்ச்சி -- ஒழுங்கு முறைச் சட்டத்தைத் திருத்தி அவசரச் சட்டம் ஒன்றைக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி பிறப்பித்தார்.

தொழில் நிறுவனங்களை அரசு மேற்கொள்ளவும் -- விற்கவும் இந்த அவசரச் சட்டம் வகை செய்கிறது.

அரசு, தான் மேற்கொண்ட தொழில் நிறுவனங்களின் பல்வேறு கடன் பொறுப்புகளை ஐந்தாண்டுக் காலத்துக்கு தீர்வு செய்யாமல் ஒத்திவைக்கவும், இத்தொழிற்சாலைகளை விற்கவும் -- வாங்கவும் அல்லது கலைக்கவும், அவசரச் சட்டம் அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது.

மன்னர் மானியக் காவலர் மாய்மாலப்பேச்சு

ஒழிக்கப்பட்டுவிட்ட ஜமீன்தாரர்கள் உயிர் பெற்று வந்தது எப்படியோ?

காங்கயம், நவ. 3—

"காங்கிரசு அரசு செய்யத் தவறிய காரியத்தையெல்லாம் கழக அரசு செய்துவருகிறது; அத்தகைய அரசின் குரல் -- டில்லியில் ஒலித்தாக வேண்டும்; அதற்கு உறுதுணையாக 'உறவுக்குக் கைகொடுப்போம் -- உரிமைக்குக் குரல் கொடுப்போம்' எனும் நமது குரலை எதிரொலிக்க மோகன்ராஜ் இந்தத் தொகுதியில் வெற்றி பெறவேண்டும்.

"தோழர் மோகன்ராஜ் ஜமீன்தார் குடும்பத்தைச் சார்ந்தவர் என்றும், 'அவருக்குத் தப்பட்டா தூக்குகிறது தி.மு.க.' என்றும் கேலிச் சித்திரம் வரைந்திருக்கிறார்கள்; அதற்காக நாம் கவலைப்படப் போவதில்லை; ஏனென்றால், அவர்கள் பேசுவதில் பொருள் இல்லை!

"ஜமீன்தார்களை ஒழித்தவர்கள் நாங்கள்தான் -- ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம் கொண்டுவந்தவர்கள் நாங்கள்தான்' என்று பேசுவது அவர்கள்தான்; அது உண்மையானால், ஜமீன்தார்கள் பின்னால் நாங்கள் போவது எப்படி? அல்லது அவர்கள் தைரியமாக ஒப்புக்கொள்ளட்டும் — நாங்கள் ஜமீன்தார்களை ஒழிக்கவில்லை; ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம் கொண்டுவரவில்லை' என்று!

"ஜமீன்தார்கள் பின்னால் நாங்கள் போகிறோம் என்று கூறுகிறார்களே -- அவர்களைக் கேட்கிறேன் — 'ஜமீன்தார்களின் ஆதிக்கமும் – அவர்கள் தத்துவமும் – அவர்களது மனப்போக்கும் – அவர்களது மெருகு குலையாத வாழ்க்கையையும் – அவர்களது அரச போகமும் நீடிக்க வேண்டும்' என்று நாங்கள் சொல்கிறோமா? 'அவர்கள்மீது கை வைக்கக் கூடாது' என்று சொல்கிறோமா? சொன்னதுமில்லை -- சொல்லப்போவதுமில்லை!

"ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம் வந்தபோதே அதை ஆதரித்தவர்கள் நாங்கள்; அதற்காகக் குரல் எழுப்பியவர் அண்ணா! இப்படிப்பட்ட நாங்களா ஜமீன்தார்களின் பின்னால் போகிறவர்கள்?

"'சிண்டிகேட்டும் – சுதந்தராவும் இராசாக்களின் பின்னாலே செல்கின்றன' என்று குற்றஞ்சாட்டினோம்; புதுக்கோட்டை மன்னரை, அவர்கள் தேர்தலில் நிறுத்தியதற்காக மட்டும் அதைச் சொல்லவில்லை; மன்னர்களுக்கு, மக்களின் வரிப் பணத்திலிருந்து மானியம் தரப்பட வேண்டும்' என்று அவர்கள் கூறியதால் அப்படிக் கூறினோம்!

"அன்றையத்தினம், 'மன்னர்களுக்கு மானியம் தரப்படவேண்டும்' ;என்று வாக்களித்தவர் காமராசர்! ஆனால் தி. மு. கழகம், மன்னர் மானிய இரத்துக்காக வாக்களித்தது!

"மன்னர்களுக்கு மானியம் தர மறுப்பது அக்கிரமம் -- அநியாயம்; பூகம்பம் வரும் -- புயல் தோன்றும் -- பூமி பிளக்கும் -- அண்டசராசரங்கள் ஆட்டம் காணும் -- ஆண்டவனுக்கே அடுக்காது' என்றெல்லாம் அவர்கள் பேசினார்கள்; அதனால்தான், மகாராசாக்களின் பின்னாலே போகின்றவர்கள் அவர்கள் என்று கூறினோம்; அதைப் புரிந்துகொள்ளாமல் அவர்கள் இப்போது இப்படிப் பேசுகிறார்கள்!"

---முதலமைச்சர் கலைஞர்

(காங்கயம் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில்)

எல்லைப் பாதுகாப்பு

இராணுவமே பொறுப்பேற்றது

காந்தி நகர், நவ. 3—

"பாகிஸ்தானுடனான 480 கிலோ மீட்டர் எல்லைப் பாதுகாப்பு முழுவதையும் இராணுவம் மேற்கொண்டிருக்கிறது"

என்று குசராத் அரசுச் செயலாளர் ஒருவர் அறிவித்தார்.

எல்லைப் பகுதியில் உள்ள கிராம மக்களின் உறுதியும் துணிவும் அபாரமானதாகும் என்றும், பல இடங்களிலும் அவர்களே பாதுகாப்புக் குழுக்களை நிறுவி செயல்பட்டு வருவதாகவும் அவர் அறிவித்தார்.

14,000 கிராமங்களிலிருந்தும் சுமார் 4,00,000 ஊழியர்கள் தாமாகவே முன்வந்து சிவில் பாதுகாப்பு இயக்கத்தில் உறுப்பினராகியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திரிபுரா ஆளும் கட்சியில் பிளவும் – கோஷ்டி மனப்பான்மையும் இருந்ததால், ஆட்சி நடவடிக்கைகளில் சுணக்கம் ஏற்பட்டுவந்ததாகவும் கூறப்படுகிறது.

[illegible]ன்னேற்றக் கழகத்திற்காக [illegible]செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

கல்பாக்கத்தில் இரண்டாவது யூனிட்

மத்திய அரசு ஒப்புதல்

திருச்சி, நவ 3—

"கல்பாக்கம் அணு மின்சார நிலையத்தில் 235 மெகாவாட் சக்தியுள்ள இரண்டாவது யூனிட் அமைக்க இந்திய அரசு சம்மதித்துவிட்டது"

என்று மின்துறை அமைச்சர் ஓ. பி. இராமன் தெரிவித்தார்.

அங்கு 200 மெகாவாட் சக்தியுள்ள முதல் யூனிட் நிர்மாண வேலை இப்போது நடந்துகொண்டிருக்கிறது.

"நெய்வேலியில் இரண்டாம் சுரங்கம் வெட்ட வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கைக்கு மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது" என்றும் அமைச்சர் கூறினார்.

திரிபுராவின் ஆட்சிப் பொறுப்பை மத்திய அரசு ஏற்றதேன்?

புதுடில்லி, நவ. 3—

"திரிபுராவின் ஆட்சிப் பொறுப்பை மத்திய அரசு மேற்கொண்டதற்கு, எல்லை நெருக்கடியே காரணம்" என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானின் போர் ஆபத்து உச்சக் கட்டத்தில் இருக்கும்போது, திரிபுரா போன்ற பகுதியில் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பதற்காகவே குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டது.

(1-ம் பக்கம் பார்க்க)

ஒரிசாவில் நிவாரணப் பணி

இராணுவம் உதவி

புவனேசுவரம், நவ. 3—

ஒரிசாவில் புயல் சேத நிவாரணப் பணிகளுக்கு இராணுவ உதவியை அரசு எதிர்பார்க்கிறது.

இந்திய இராணுவம் பாதிக்கப்பட்டோருக்கு உதவி செய்வதில் ஏற்கனவே ஈடுபட்டிருக்கிறது.

புயலில் இறந்தோரின் தொகை இன்னமும் உறுதியாகக் கூறப்படவில்லை; அதிகாரபூர்வமான செய்திகள், 6,000 பேர் உயிரிழந்திருக்கக் கூடுமென்றும் அதிகாரப்பற்றற்ற செய்திகள் 20,000 பேர் மாண்டிருக்கக் கூடுமென்றும் தெரிவிக்கின்றன.

நகராட்சி மின்சார நிறுவனங்கள்

அரசு மேற்கொள்ள முடிவு

சென்னை, நவ 3—

மதுரை, கோவை, பொள்ளாச்சி, தஞ்சாவூர், கரூர் ஆகிய நகராட்சிகளின் மின்சாரத் துறை ஊழியர்களுக்கு மாநில மின்சார வாரிய ஊழியர்களுக்கான ஊதிய விகிதத்தை விரிவுபடுத்துவது என்று தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கான உத்தரவு விரைவில் பிறப்பிக்கப்படும்.

நகராட்சி மின்சார நிறுவனங்களை மேற்கொள்ளவும அரசு முடிவு செய்துள்ளது.

தலைமைக் கழக அறிவிப்பு

வாலாசாபேட்டை தோழர்கள்பேரில் ஒழுங்கு நடவடிக்கை

வட ஆற்காடு மாவட்டம் வாலாசாபேட்டை நகர தி. மு. க. கிளையின் கீழ்க்காணும் தோழர்கள் மூவரும், கழகக் கட்டுப்பாடு -- ஒழுங்குமுறைகளுக்கு மாறாகவும், அண்மையில் நடைபெற்ற தேர்தல்களில் கழகத்திற்கு எதிராகப் பகிரங்கமாகவும், கழகத் தோழர்களிடையே பிளவு உண்டாக்கும் வகையிலும் தொடர்ந்து செயல்பட்டு வருவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு முறைப்படி தலைமைக் கழகத்திற்கு மேலமைப்பு செய்துள்ள பரிந்துரையின் அடிப்படையில், கீழ்க் குறிப்பிட்டுள்ள மூவரும் இன்றுமுதல் கழகத்திலிருந்து தற்காலிகமாக விலக்கி (சஸ்பெண்டு) வைக்கப்படுகின்றனர்; இவர்கள்பேரில் விரைவில் முறைப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

விலக்கி வைக்கப்படும் தோழர்கள் :—

1. த. க. பாலசுந்தரம் (வாலாசா நகர தி. மு. க. செயலாளர்)
2. வா. சி. நாகரத்தினம் எம்.சி. (வட்டப் பிரதிநிதி)
3. சி. ஏ. வரதராசன் (உறுப்பினர் எண் 319501)

'அறிவகம்'
சென்னை-13
1-11-1971

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

பொள்ளாச்சித் தொகுதியில் தேர்தல் பிரச்சாரம்

நாவலர் -- புரட்சி நடிகர் மற்றும் அமைச்சர்கள் சுற்றுப்பயணம்

சென்னை, நவ. 3—

பொள்ளாச்சி நாடாளுமன்ற இடைத் தேர்தலையொட்டி கழகப் பொதுச்செயலாளர் நாவலர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், வேளாண்மைத் துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், மின்வாரிய அமைச்சர் ஓ. பி. இராமன், கழகப் பொருளாளர் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். ஆகியோர் தேர்தல் பிரச்சாரம் செய்யச் செல்கிறார்கள்.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். 9, 10, 11-ந் தேதிகளில் பொள்ளாச்சித் தொகுதி முழுவதும் சூறாவளித் தேர்தல் பிரச்சாரம் செய்வார்; பட்டிதொட்டிகளிலெல்லாம் சென்று பொதுக்கூட்டங்களில் பேசுவார்; இதற்காக ஆங்காங்கே உள்ள எம். ஜி. ஆர். ரசிகர் மன்றங்கள் விரைவாக ஏற்பாடுகளைச் செய்துவருகின்றன.

கல்வி அமைச்சர் நாவலர், 9, 10, 11-ந் தேதிகளில் பொள்ளாச்சிக்குச் சென்று மூன்று நாட்கள் தேர்தல் பிரச்சாரம் செய்வார்.

பேராசிரியர் க. அன்பழகன் 4, 5-ந் தேதிகளிலும், அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் 10, 11-ந் தேதிகளிலும, அமைச்சர் ஓ. பி. இராமன் 6-ந் தேதியும் செல்கின்றனர்.

அமைச்சர்கள் செல்வதையொட்டி தி. மு. கழகக் கிளைகளும் -- கூட்டணியினரும் பொதுக்கூட்டங்களுக்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். கூட்டணிச் சார்பில் இரவு 1-மணி வரையில் பொதுக்கூட்டங்கள் -- கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

சீனவுடன் தூதுவர் உறவு-இந்தியாவின் ஆர்வம்

விரைவில் முடிவு செய்யப்படும்

புதுடில்லி, நவ. 3—

சீனவுடன் உறவை மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், ஆசியாவிலும் -- உலகிலும் சமாதானம் நிலைக்க இந்த இரு நாடுகளும் ஒத்துழைத்து செயல்பட வேண்டுமென்றும் இந்திய அரசு மிகவும ஆர்வம் காட்டிவருகிறது.

இதற்கேற்ப, சீனவுடன் தூதுவரக உறவை முழு அளவுக்கு வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் இந்தியா கருதுகிறது.

வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கும் தலைமையமைச்சர் இந்திரா காந்தி இந்தியாவுக்குத் திரும்பியதும், இது குறித்த கொள்கை ஒன்று முடிவு செய்யப்படும் என்று தெரியவருகிறது.

தூதுவர் பரிமாற்றம் நடைபெறுமானால், இதற்கு, பொதுவாழ்விலோ -- வெளிநாட்டுத் துறையிலோ உள்ள தகுதிபடைத்த நபர் ஒருவரை அரசு பரிசீலித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

சீனவுடன் நட்புறவை வளர்த்துக்கொள்ள இந்தியாவின் அரசியல் சூழ்நிலையும் இப்போது சாதகமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆயினும், இந்தியா ஒரேயடியாக இதில் தீவிரம் காட்டாது என்றும் தெரியவருகிறது; சீனவும் இதற்கு விரும்புகிறதா என்பதைக் கண்டறிந்தே மேற்கொண்டு நடவடிக்கையில் இறங்கும். இதற்கு முதற்படியாக, 'இந்தியா -- பாகிஸ்தான் பிரச்சினையில் குறைந்தபட்சம் சீன நடுநிலை வகிக்க வேண்டும்' என்று இந்தியா எதிர்பார்க்கிறது.